முருகப்பெருமான் துணை

**மகான் திருநீலநக்க நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**31.10.2023**, செவ்வாய்கிழமை

1. ஞானத்திறவு கொண்ட அரங்கா
ஞானவாசல் கண்ட தேசிகா
ஞானத்தலைவன் ஆசிபடவே
ஞானிகளை படைக்கவந்த குருராசா
2. அரசனே அரங்கனே உமை போற்றி
அறிவிப்பேன் அறிவுரை ஆசி
வரமென சோபகிருது துலை திங்கள்
வல்லமைபட முன்னான்கீர் திகதி குசன்வாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 14 ம் நாள், 31.10.2023, செவ்வாய்கிழமை)
3. வாரமதில் திருநீலநக்க நாயனாரும்
வழங்குவேன் உலகோர் உயர்வுபெற
சோரமிலா ஞானிகள் வழிபாடு
சுத்தநெறிபட கடைபிடிக்க
4. கடைபிடிக்க உலக மக்களுக்கு
கலியின் கட்டங்கள் விலகும்
பீடை சோடை அல்லலில்லா
பெருஞ்சக்தியாக ஞானிகள் ஆசிகிட்டி
5. ஆசிகிட்டி ஆபத்து இடைகண்டமிலா
ஆயுள் காப்பு வந்தடையும்
ஆசியுடன் தருமபாதை ஏற்று
அன்னதான சேவை ஆற்றிட
6. ஆற்றிட தருமவான்கள் எனும்
அடையாளம் பெருகி நின்று
பற்றிய பிறவி கருமா அகலும்
பந்தபாசம் எனும் கட்டுக்கள் விலகி

7. விலகியே ஜீவ தயவுமிக்க
விளைவென்ற மக்களாகி
காலத்தை வெல்லும் வண்ணம்
கலியினில் சில சித்திகளும் அடைவர்
8. அடையவே உலக மாற்றத்துக்கு
ஆக்கப் பூர்வ ஞானவான்களாகி
தடைகளை எல்லாம் வென்று
தரணிக்கு நல்ல தலைமை தருகின்ற
9. தருகின்ற ஞானிகள் ஆகவும்
தவராஜன் தேர்வு செய்துள்ள
ஆறுமுகப் பெருமான் படைகளாக
அவதார பலமதை கண்டு
10. கண்டுமே ஞான ஆட்சிதனை
கலியுகத்தினில் படைப்பர்
தொண்டுவழி சேவை கூட்டி
தேசமெங்கும் தருமம் பரவிட
11. பரவிட சன்மார்க்கம் தானும்
பழுதில்லா எங்கும் நிரம்பி
துறவி அரங்கன் அவதாரம் உணர்த்தி
தேசமெல்லாம் ஞான ஆட்சி மலரும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—